# புல்லுக்காட்டுல கொள்ளை லாபம்



நாகர்கோவிலில் இருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது காளக்குடி, 'ராம்ஜி கார்டன்' தான் ராமச்சந்திரனின் புல்தோட்டம். ஆறு ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்திருக்கிறது இவரது தோட்டம். ஐம்பத்து ஐந்து வயது பெரியவரான ராமச்சந்திரன், பள்ளிப் படிப்பையே தாண்டாதவர். இன்று சுயதொழில் மூலமாக அமோக வருமானம் ஈட்டி, பலரையும் தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துக் கொண்டிருக்கிறார். எனக்கு நாலு நர்சரி கார்டன் இருக்கு. அதுல செடி வாங்க வர்றவங்க, புல் தரை வளர்க்கணும்னா என்ன பண்ணணும்ன்னு கேட்டுக்கிட்டே இருப்பாங்க. அப்பத்தான் நாமளே புல்லையும் வளர்த்துப் பார்த்தா என்னனு ஒரு யோசனை வந்துச்சி. அதைப் பத்தி விசாரிக்க ஆரம்பிச்சேன். பெங்களூர் தான் புல் வளர்ப்புல சிறப்பா இருக்குன்னு கேள்விப்பட்டேன்.

நேரடியா அங்கப் போனேன். விதைப்புல் வாங்கிட்டு வந்து முதல்ல ஒரு ஏக்கர்ல்ல போட்டுப் பார்த்தேன். சீக்கிரமே புல் வளர்ப்பு எனக்கு பிடிபட்டுப் போகவே, இன்னிக்கு ஆறு ஏக்கர்ல வளர்க்கற அளவுக்கு நான் வளர்ந்துட்டேன்" என்ற சொல்லிச் சிரித்த ராமச்சந்திரன், தொடர்ந்தார்.இந்தப்புல்லை மண்ணோடு சேர்த்து சதுரம் சதுரமான வெட்டி எடுத்துத் தேவையான வீடுகளுக்கு கொண்டு போய் பதிச்சிக்கலாம். ஒரு சதுர அடி புல் வளர்க்க ஐந்திலிருந்து ஆறு ரூபாய் வரைக்கும் செலவு பிடிக்கும். தோட்டத்திலேயே வித்தா பத்து ரூபாய்க்கும், வீடுகளுக்குப் போய் பதியவெச்சிக் கொடுத்தா இருபது ரூபாயும் வாங்குறோம். இதுலயே எங்களுக்கு போதிய லாபம் கிடைக்குது. ஒரு ஏக்கர்ல முணு மாசத்துக்கு ஒரு முறை முப்பதாயிரம் ரூபாய் வரை புல் விக்க முடியும்.இப்போல்லாம் வீடு கட்டுற எல்லாருமே தோட்டம் வெக்க ஆசைப்படுறாங்க. அதனால புல் வளர்ப்பு ஏகத்துக்கும் லாபம் தரும் விவசாயமாத்தான் இருக்கு. ஆனா, தேவையான அளவுக்கு நம்ம பகுதிகள்ல புல் வளர்ப்பு நடக்கல.

அது தான் விலை அதிகமா இருக்கக் காரணம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு பலரும் புல் வளர்க்க ஆரம்பிச்சா நல்ல லாபம் பார்க்கலாம் என்று ஆலோசனைகளைச் சொன்னார்.முத்தின, பழுப்பு நிறமான புல் தான் விதைக்கறதுக்கு சரியானது. அதைத் தேரிமணல் (செம்மண்ணில் ஒரு வகை) நிலத்துல தூவி, அது மேல் தேரிமணலை பரப்பி, இலை தழைகளை உரமாப் போட்டு தண்ணி பாய்ச்சிகிட்டு வந்தா போதும். ஒரு சதுர அடியில தயார் செய்ற விதைப்புல்லை, அஞ்சி சதுர அடியில நடமுடியும். தினமும் மூணு வேளை தண்ணி பாய்ச்சிகிட்டே வந்தா மூணு மாசத்துக்குப் பிறகு அறுவடைக்குத் தயாராகிவிடும்.

இது தான் புல் விவசாயம்.வீடு கட்டுறது தொடர்ந்து நடக்கறதால புல் வளர்ப்புக்கு எல்லாக் காலத்துலயும் தனி மவுசு இருக்கு. ஒரு ஏக்கர், ரெண்டு ஏக்கர் வெச்சிருக்கிறவங்க கூட துணிஞ்சி புல் வளர்க்கலாம். ஆனா சம்பந்தப்பட்ட ஏரியாவுல எப்படியெல்லாம் விற்பனை வாய்ப்பிருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டு அதுல இறங்குறது நல்லது.நெல்லுக்கு இறைத்த நீர் ஆங்கே புல்லுக்கும் பாயுமாம் என்பார்கள். ராமச்சந்திரனோ, புல்லுக்கே நீர்ப் பாய்ச்சி நெல்லை விட லாபம் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது சந்தேகமில்லாமல் சாதனை தானே !

**தொடர்புக்கு**

தொலைபேசி:04652-265030

அலைபேசி:93675-11413